# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

அசல் மனு எண்: 0720 / 2016/ ந
ஆணை எண்: 0187 / 2016
நாள்: 03 /12 /2016

**13.06.2016 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தி** — **முறைமன்ற நடுவத்தில் தாமாக முறையீடாக பதிவு செய்யப்பட்டது.**

**நகராட்சி ஆணையர்,**
**பல்லவபுரம் நகராட்சி.**
**மற்றும் அனதாபுத்தூர் நகராட்சி.** — **எதிர் மனுதாரர்.**

**ஆணை**

13.06.2016 நாளைய தினமலர் நாளிதழில் வரப்பெற்ற நகராட்சி வரியின நிலுவை தொடர்பான செய்திகள் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்க்ள் முறைமன்ற நடுவச் சட்டப் பிரிவு 7 ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறைமன்ற நடுவத்தால் தாமாக முறையீடாகப் பதிவு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இம்முறைமன்ற நடுவம் 19.07.2016 நாளிட்ட அறிவிப்பாணையில் வரியின நிலுவை விவரங்கள் மற்றும் உள்ளாட்சி நிதித்தணிக்கைப் பத்திகளில் வரி இனங்கள் தொடர்பானவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் ஆகியவற்றைத் தாக்கல் செய்திடுமாறு பல்லவபுரம் மற்றும் அனகாபுத்தூர் நகராட்சி ஆணையர்களுக்கு ஆணையிடப்பட்டது.

ஆனகாபுத்தூர் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.560/16/அ1 நாள் 25.07.16 மற்றும் பல்லவபுரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண் 3986/16/அ1 நாள் 08.08.16 வரப்பெற்றன. இவ்வரிக்கைகளைப் பரிசீலித்ததில் அனகாபுத்தூர் நகராட்சியில் அனைத்து வரி இனங்களிலும் சேர்த்து 20.25 சதவீதம் மட்டுமே வசூலிக்கப்பட்டு 79.75 சதவீதம் நிலுவையில் உள்ளது கண்டறியப்பட்டது. ஆனால் உரிய கால அவகாசத்திற்குள் 100 சதவீத வரி வசூல் இலக்கினை அடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக உறுதியளிக்கப்பட்டள்ளது. மேலும் உள்ளாட்சி நிதித் தணிக்கைப்பற்றி எண் 9 ன் படி 31.03.15 அன்று ரூ.76,84,446/- வரி வசூல் பாக்கி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்லவபுரம் நகராட்சியைப் பொறுத்தவரை 42.69 சதவீதம் வசூலிக்கப்பட்டு 57.31 சதவீதம் வரியின வசூல் பாக்கி உள்ளது. மார்ச் 16க்குள் நிலுவையின்றி வரிவசூல் செய்து முடிக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது. மேலும் நீதிமன்றத்தடையாணைகள் உள்ளதால் கீழ்க்கடுள்ளவாறு வரி வசூல் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| காலம் | தொகை | வரியின் விவரம் | நிலை |
|---|---|---|---|
| 2005-2006 முதல் 2015-2016 வரை. | ரூ.82,84,085/- | காலிமனை வரித்தொகை. | சென்னை உயர் நீதிமன்ற தடையாணை/ வழக்கு நிலுவை. |
| 2005-2006முதல் 2015-2016 வரை. | ரூ.4,42,28,018/- | காலிமனை வரி (குப்தா & கோ.) | சென்னை உயர்நீதிமன்றத் தடையாணை. |

வரியினங்கள் தொடர்பான தணிக்கைத் தடை பத்திகள், நிவர்த்தி செய்யப்பட்டவை தொடர்பான விவரங்களைத் தாக்கல் செய்யுமாறு இம்முறை மன்ற நடுவம் 30.08.16 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

அதன்படி அனகாபுத்தூர் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண் 560/16/அ1 நாள் 16.09.16 மற்றும் பல்லவபுரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண் 3986/16/அ1 நாள் 14.09.16 ஆகியவை வரப்பெற்றன. மேற்கண்ட அறிக்கைகளின்படி வரியின வசூல்,நிலுவை விவரம் வருமாறு.

I <u>அனகாபுத்தூர் நகராட்சி</u>

அனைத்து வரியினங்கள் (இலட்சத்தில்)
(16.09.16 வரை)

| கேட்பு | வசூல் | நிலுவை | வசூல் சதவீதம் |
|---|---|---|---|
| 236.31 | 73.55 | 162.68 | 31.12 |

31.03.2014 வரையிலான தணிக்கைப் பத்தியின்படி ரூ. 79,13,271 /- நிலுவை எனவும் 31.03.2015 வரையிலான தணிக்கைப் பத்தியின்படி ரூ. 76,84,446/- எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

II <u>பல்லவபுரம் நகராட்சி</u>

தணிக்கைத் தடைப் பத்தியின்படி வரிவசூல் நிலுவை (31.03.2013) விவரங்கள்.

| | |
|---|---|
| சொத்து வரி | 3,92,03,329/- |
| காலிமனை வரி | 7,45,72,046/- |
| தொழில் வரி | 69,55,749/- |
| **மொத்தம்** | **12,03,75,124/-** |

சில வரி கேட்புகள் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத் தடையாணைகள் சிலரால் பெறப்பட்டுள்ளதால் ரூ 5.23 கோடி வரை தற்போது வசூலிக்க இயலாத நிலை உள்ளதாகவும், தடையாணைகளை நீக்கம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மேற்படி நிலுவைத் தொகை வசூலிக்கப்பட்டுவிடுமென உறுதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொண்டு இவ்வருட இறுதிக்குள் நிலுவையின்றி வரியினங்கள் வசூலிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொல்லிக்கொண்டே தடையாணை நீக்க நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய செயல் அல்ல. இது உள்ளாட்சி அமைப்புக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தும் செயலாகும்.

தக்க துரித நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வரியினங்களின் வசூலை முழுமையாக முடித்து நகராட்சிகளுக்கு எவ்வித நிதி இழப்பும் ஏற்படாமலிருப்பதை உறுதி செய்திட வேண்டுமென சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

பெறுநர் /ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

1. நகராட்சி ஆணையர்,
   பல்லாவபுரம் நகராட்சி, குரோம்பேட்டை,
   **சென்னை 600 044.**
2. **நகராட்சி ஆணையர்,**
   **அனகாபுத்தூர் நகராட்சி,**
   **அனகாபுத்தூர். சென்னை 600 070.**

**செயலாளருக்காக**